# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 6/2020 | வா.சா. | : 1 |
| பெயர் | : ராமசாமி | த/பெ. | : வெள்ளைச்சாத்தான் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : ஒத்தினிப்பட்டி |
| தேதி | : 03.04.2024 | வயது | : 55 /2024 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 3:16 P.M. – 3:42 P.M.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

15. எனது வழக்கின்படி நான் குடியிருக்கும் வீட்டைத் தவிர எங்கள் கிராமத்தில் எனக்கு வேறு வீடுகள் இல்லை என்றால் சரி. நான் குடியிருக்கும் வீடு இந்த வழக்கு சொத்தில் இல்லை, நத்தம் ஊர்க்குடியிருப்பில் உள்ளது என்றால் பட்டா இடத்தில் உள்ளது. நான் எந்தெந்த தேதியில் வழக்கு சொத்துக்கு உள்ள கூட்டுப்பட்டாவை ரத்து செய்யக்கோரி மனு கொடுத்தேன் என்பதையும், அதற்கான ஆவணங்களையும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். கடந்த 28.08.2019 அன்று பிரதிவாதிகள் எனது அனுபவத்தை இடைஞ்சல் செய்ததாக இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன், அனுபவம் பிரதிவாதிகளிடம் உள்ளது என்றால் சரியல்ல, அனுபவம் என்னிடம்தான் உள்ளது.

16. வழக்கு சொத்தில் புளியமரம் இருந்ததாகவும், அனைத்து மரங்களையும் வெட்டிவிட்டதாகவும், மரங்கள் ஏதும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். இந்த விபரங்கள் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்லியுள்ளேன், பிரதிவாதிகள் தங்கள் சொந்த தேவைக்காக ஒரு மரத்தை வைத்துக் கொண்டு மற்ற 6 மரங்களை அவர்கள்தான் வெட்டினார்கள் என்றால்

இல்லை, நான்தான் 7 மரங்களையும் வெட்டினேன். இவ்வழக்கு சொத்தைப் பொறுத்து ஏற்பட்டுள்ள கிரயங்கள் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும், அந்த கிரயப்படி 2003ம் ஆண்டு மலையாண்டி மகன் வைரவன் என்பவருக்கு வழக்கு சொத்தை பிரதிவாதிகள் ஈட்டு அடமானம் வைத்திருந்தார்கள், இந்த விபரங்கள் எனக்கு நன்கு தெரிந்தும் வழக்கில் மறைத்து பொய்யான விபரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

17. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் எனது உரிமை மூலத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 கிஷ்தி ரசீதை வைத்து எனக்கு மட்டும் பாத்தியப்பட்ட நிலத்திற்கு வழங்கப்பட்டதாக எடுத்துக் கொள்ள முடியாது, கூட்டுப் பட்டாவில் இருந்தால் ஒருவர் பெயரில்தான் வரி விதிப்பு செய்வார்கள் என்றால் சரியல்ல, என்னுடைய பெயரில்தான் சொத்து உள்ளது. கூட்டுப் பட்டாவில் முதலில் உள்ளவர் பெயரில்தான் ரசீது போடுவார்கள் என்றால் சரி. கூட்டுப் பட்டாவில் உள்ள முதல் பெயரைக் குறிப்பிட்டு மற்றும் வகையரா என்று அடங்கல் எழுதுவார்கள் என்றால் சரி.

18. வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.9 வரையிலான வீட்டு வரி ரசீதுகள் மற்றும் மின் கட்டண ரசீதுகள் இவ்வழக்கு சொத்திற்குரியது அல்ல, மேற்படி வீட்டு வரி ரசீது மற்றும் மின் கட்டண ரசீதுக்கான வீடு ஊருக்குள் உள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.13 வரையிலான வில்லங்க சான்றிதழ்கள் இவ்வழக்கு சொத்திற்குரியது அல்ல, நான் வேறு சொத்து விபரத்தை காண்பித்து வில்லங்க சான்று வாங்கிவிட்டு சொத்து விபரத்தை காட்டாமல் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதால் மேற்கண்ட வில்லங்க சான்றிதழ்கள் இவ்வழக்கில் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

19. வா.சா.ஆ.14 மற்றும் வா.சா.ஆ.15 கிஷ்தி ரசீதுகள் பிரதிவாதிகளின் உரிமைக்கும் சேர்த்து வழங்கப்பட்டது, அது எனது உரிமை மூலத்தை மட்டும் காட்டக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து முழுவதும் பிரதிவாதிகளின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது, நான் வேண்டாத நபர்களின் தூண்டுதலின் பேரில்கூட்டுப் பட்டாவை சாதகமாக பயன்படுத்தி வழக்கு சொத்து முழுவதையும் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

20. இவ்வழக்கு சொத்து என் அப்பாவிற்கு எந்த வகையிலும் பூர்வீக பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்திற்கு என் அப்பா பெயரில் உள்ள ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வழக்கு சொத்து என் பெரியப்பா பூசாரி அழகன் வகையராவிற்கு பாத்தியப்பட்டது, அதனை முழுவதுமாக பிரதிவாதிகள் கிரயம் பெற்றுவிட்டார்கள் என்றால் அவர்கள் கிரயம் வாங்கினார்களா என்று எனக்கு தெரியாது. எனக்கு குடியிருக்க வீடு இல்லை என்பதற்காக கருணை அடிப்படையில் என் பெரியப்பா கொடுத்த 5 செண்ட் இடத்தை பயன்படுத்தி முழு சொத்தையும் அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் இல்லை.

21. இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானதல்ல, வழக்கிற்காக புனையப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்தவர்களான ராஜாங்கம், ராமசாமியின் மகள் ரம்யா, ராதிகா, மகன் ராமசாமி ஆகியோரை விசாரித்தால் இவ்வழக்கின் உண்மை தன்மை தெரியவரும் என்றால் விசாரிக்கலாம். வழக்கு சொத்து பூசாரி அழகனுக்கு பாத்தியப்பட்டது என்பதை சொல்ல அவரது மகன்கள் லெட்சுமணன், நாச்சான் மற்றும் அவரது வாரிசுகள் உள்ளார்கள் என்றால் இல்லை.

22. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானது என்பதால்தான் பூர்வீகம் சம்பந்தப்பட்ட விபரங்களை வழக்கில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு உரிமை மூலம் இல்லாததால்தான் நான் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் கேட்டுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் வழக்கின் செலவு தொகை ஆகியவை எனக்கு கிடைத்தக்கத்தல்ல என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 03.04.2024 கையெழுத்து செய்துள்ளார்.

V. Udayasuriya

Digitally signed by V. Udayasuriya
Date: 2024.04.03 13:53:00 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.